விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 064 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 09 வெள்ளிக்கிழமை (21.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வித்தியா கொலை வழக்கு
## சுவிஸ் குமாரை தப்பிக்க உதவிய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு 4 வருட சிறைத் தண்டனை

(வவுனியா)

வித்தியா கொலை வழக்கு குற்றவாளிகளில் ஒருவரான சுவிஸ்குமாரை தப்பிக்க உதவிய குற்றச்சாட்டில் வடமாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் 4 வருட சிறைத் தண்டை வழங்கித் தீர்ப்பளித்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் குற்றவாளியான சுவிஸ்குமாரை

15

## வன்முறைக் கும்பலினால்
## தனங்களப்பில் தாக்கப்பட்ட ஓய்வுபெற்ற அதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)



வன்முறைக் கும்பலினால் தனங்களப்புப் பகுதியில் வைத்து தாக்கப்பட்ட ஓய்வுபெற்ற அதிபர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் நீர்வேலியைச் சேர்ந்த விசுவாசம் (வயது-63) என்ற ஓய்வுநிலை அதிபரே உயிரிழந்தவராவார்.

பூநகரி மத்திய கல்லூரி அதிபரும், உயிரிழந்த முன்னாள் அதிபரும் கடந்த

15

# பாதாள உலகத்துக்கு முடிவு கட்டப்படும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

**பாதாள உலகத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கையும் எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

பத்தாவது பாராளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்றுப் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

16

## தாளையடியில் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுத் துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர், கிளிநொச்சி மாவட்ட விசேட அதிரடிப்படையினரும் மருதங்கேணிப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது

15

## போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறைப் பகுதியில் இளைஞன் ஒருவர் நீண்டகாலமாகப் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வருவதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த இளைஞனை பொலிஸார் கைது செய்து சோதனை

15

## புதுக்கடைத் துப்பாக்கிப் பிரயோகம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் முழு நாட்டுக்கும் பாதுகாப்பற்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது.

குறிப்பாக இது தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும். அதனால் நாட்டினதும், மக்களின

15

## நெடுந்தீவு, மன்னாரில் 16 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, மன்னார் கடற்பரப்பில் 16 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்று இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக்கடற்படையினர் இரண்டு

15

## எதிர்வரும் 27ஆம் திகதி வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் மகா சிவராத்திரி தினத்திற்கு மறுநாள் விடுமுறை வழங்கப்

15

## மின்சாரம் தாக்கியதில் கிளிநொச்சியில் ஒருவர் பலி

(கிளிநொச்சி)

மின்சாரம் தாக்கியதில் 86 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணியம்குளம் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெல் வயலுக்குள் வைக்கப்பட்ட மின்குமிழ் வயர் நெல் அறுவடை செய்த பின்பு வயலுக்கு வைக்கப்பட்ட நெருப்பின் மூலம் வயர் அறுந்த நிலையில் மின்சாரம் தாக்கியிருக்கலாம்

15

## செம்மணி மனிதப் புதைகுழி பார்வையிட்டார் நீதவான்



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1ஆம் ஆண்டு நினைவுதின அழைப்பு



மண்ணில்
1951
10
01

விண்ணில்
2024
03
03

வேம்படி உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவர், கடந்த 2024.03.03 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் கணேசு சற்குணேஸ்வரி

**(ஓய்வு பெற்ற ஆசிரியை)**

**யா/உடுத்துறை மகா வித்யாலயம், யா/மேலைபுலோலி சைவ பிரகாச வித்தியாசாலை, மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, தி சென்மேரிஸ் கல்லூரி**

ஆகிய பாடசாலைகளில் சேவையாற்றிய ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார்.

அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவுதினம் 21.02.2025 இன்று வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்


கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(859)

குடும்பத்தினர்
077 547 9327
076 162 5480

# மரண அறிவித்தல்

பிறப்பு
1955
-
08
-
10



இறப்பு
2025
-
02
-
18

## சுந்தரம் செல்வராசா

**(ஓய்வுநிலை அதிபரும் சமாதான நீதவானும் மத்தியஸ்த சபை உறுப்பினரும்)**

மத்துவிலைப் பிறப்பிடமாகவும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் செல்வராசா அவர்கள் (18.02.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - தெய்வானை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சீனியர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரி(ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் பாசமிகு கணவரும் ஞானமாதங்கி(DO - பிரதேச செயலகம், கோப்பாய்), சாரங்கி(DO- சுற்றுலா பணியகம், வடமாகாணம்), சுகாங்கி(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோபிநாத்(முகாமையாளர் JM moto guard), தர்ஷன்(விரிவுரையாளர் GJRTI -Jaffna), ராஜ்குமார்(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிருத்விகா(UK) அவர்களின் பாசமிகு பேரனும் சிவயோகராசா, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவசந்திரபோஸ், யோகராசா ஆகியோரின் சகோதரனும் அமரசிவம், தனேஸ்வரி, காலஞ்சென்ற அமரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

077 939 4667
076 091 0699

(C-2303)

தகவல்:
குடும்பத்தினர்

# ஓய்வுபெற்ற அதிபர் கொலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

*(யாழ்ப்பாணம்)*

கிளிநொச்சி பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்தவேளை, தனங்களப்புப் பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் ஓய்வுபெற்ற அதிபர் விசுவாசம் உயிரிழந்துள்ளார்.

இக் கொடூரச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன்திலீசன் விடுத்த கண்டன அறிக்கையில்,

கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் தற்போதைய அதிபரும், ஓய்வுபெற்ற அதிபரொருவரும் கடந்த சனிக்கிழமை (15.02.2025) பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரவு வேளை பயணித்துக் கொண்டிருந்த போது, தனங்களப்புக்கு அண்மித்த பகுதியில் நிறை போதையில் வந்த காடையர் குழுவொன்றினால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையில், ஓய்வுபெற்ற அதிபர் விசுவாசம் அவர்கள் நேற்று(20) உயிரிழந்துள்ள செய்தி கல்விப் புலத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுமக்களின் வாகனங்கள் சில ஏற்கனவே காடையர்களால் இந்தப் பகுதியில் வைத்து கொள்ளையடிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் தற்போது அறிய முடிகின்றது.

அவ்வாறாயின் இத்தகைய குற்றச் செயல்கள் நடைபெற்றுவரும் நிலையில், பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பில் அக்கறையற்று செயற்பட்டு வந்துள்ளமை நன்கு புலனாகின்றது.

இந்நிலைமையானது இன்று ஒரு கல்வியாளரின் உயிர் பறிக்கப்படுமளவிற்குச் சென்றுள்ளது. இது இலங்கையில், குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் மக்கள்பாதுகாப்பாகப் பயணிக்க முடியாது என்ற நிலையையே வெளிப்படுத்தி நிற்கிறது.

தமது கடமைகளின் நிமித்தம் கூட, சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் சென்றுவர முடியாத அளவுக்கு காடையர் கும்பலின் ஆதிக்கம் தலைதூக்கியிருக்கும் நிலையில், இத்தகைய சம்பவங்களை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

# வ.மா அதிபர்கள் சங்கம் வன்மையான கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் வைத்து இரண்டு அதிபர்கள் தாக்கப்பட்டதுடன் அதில் தாக்குதலுக்கு உள்ளான ஓய்வுபெற்ற அதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதாக சங்கத்தின் செயலாளர் ஜெ.கோகுலவாசன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம-7)

### சன்னப் பாகங்கள் மீட்பு

புதுக்கடை நீதிமன்றில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் கும்பல் உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவவின் இதயத்தை துளைத்த துப்பாக்கி சன்னத்தின் பாகங்கள், துவல்கள் நேற்று (20) நீதிமன்றத்தில் அரச இரசாயன பகுப்பாய்வாளர்களால் மீட்கப்பட்டன. (ம-7)

# புதுக்கடை படுகொலை பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் புதன்கிழமை "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி 25 வயதுடையவர் எனவும் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவரை சுட்டுக் கொலை செய்வதற்கு வழக்கறிஞர் வேடத்தில் சென்ற பிரதான சந்தேக நபருக்கு உதவி செய்த பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளை பேணி வந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை புவியியல் பாட ஆசிரியர்

**திருமதி விஜயரூபி ஜெகதீஸ்வரன்**

அவர்களின் அன்புத் தாயார்



## திருமதி குணரெட்ணம் நாகேஸ்வரி

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு துயர்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3473)

**பாடசாலைச் சமூகம்**
**யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசமும் எம்மை ஏமாற்றுகிறது!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# தீச்சட்டி ஏந்திப் போராட்டம்

(தருமபுரம்)

**இலங்கையில் ஆட்சியாளர்கள் மாறினாலும் இனப்படுகொலைக்கான நீதி, இதுவரை கிடைக்கவில்லை என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி யோ.கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.**





காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக தீச்சட்டி ஏந்திக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினராகிய நாம் 2017 தொடக்கம் இன்று வரையும் உள்நாட்டில் பல போராட்டங்களை நடத்தினோம். இலங்கை அரசின் நீதித் துறையில் நம்பிக்கையில்லை என்ற ஒரு காரணத்தினால் நாம் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வருகின்றோம்.

புதிய ஜனாதிபதியாக கடந்த 2024 செப்ரெம்பர் பதவியேற்ற அநுர குமார திஸாநாயக்க அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் எந்தவொரு நல்லெண்ணமும் அவர்களின் செயலில் தென்படவில்லை. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை.

ஐ.நா சபைகளும் கூட இலங்கை அரசைக் காப்பாற்றும் ஒரு செயலாக கால அவகாசங்களை வழங்கி கால நீடிப்பைச் செய்து வருவதை நாம் எட்டு வருடங்களாக அவதானித்து வந்துள்ளோம்.

எனவே இனியும் எம்மை ஏமாற்றாமல் எங்கள் உணர்வுகளை மதித்து சர்வதேச நீதி கிடைக்க ஆவன செய்யுமாறு சர்வதேசத்திடம் வேண்டுகின்றோம். எனத் தெரிவித்தார். (நி-8-316)

## யாழ் வருகிறார்

### கைத்தொழிற்றுறை அமைச்சர்

(கொழும்பு)

கைத்தொழிற்றுறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்கா மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியபெரும ஆகியோருடன் மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் மற்றும் வைத்தியர் பவானந்தராஜா ஆகியோருடன் நேற்று பாராளுமன்றில் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் கைத்தொழிற்றுறையை மேம்படுத்தும் வழிமுறைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. காங்கேசன் துறை, ஆனையிறவு, பரந்தன், மாங்குளம் மற்றும் ஒட்டுசுட்டான் உள்ளிட்ட பகுதிகளில் கைத்தொழிற்றுறை அபிவிருத்திக்குத் தேவையான நடைமுறைகள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி மேற்குறித்த அமைச்சர்கள் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். இதன்போது, கைத்தொழிற்றுறை அபிவிருத்திக்காக சிறப்புப் பார்வையிடுவதோடு, தொழிற்சாலைகள் மற்றும் தொழில் பேட்டைகள் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த முயற்சியின் மூலம் வடக்கு மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

## இலங்கை-இந்திய கூட்டு முயற்சியில்

### சம்பூரில் 120 மெகாவாட் சூரிய மின்னுற்பத்தி நிலையம்

**அமைச்சரவை அனுமதி**

(கொழும்பு)

திருகோணமலை, சம்பூரில் மொத்தம் 120 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கு இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தில் 50 மெகாவாட் சோலர் மின் உற்பத்தி நிலையமும் இரண்டாம் கட்டத்தில் 70 மெகாவாட் மின் உற்பத்தி நிலையமும் நிறுவுவதற்கு இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இந்த முயற்சியானது இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக கட்டுமானம், உரிமை மற்றும் செயற்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரிந்துரைகளுக்கு அனுமதி

(கொழும்பு)


11 அமைச்சுக்களின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 5 மாகாண சபைகளில் நிலவும் 4,987 வெற்றிடங்களில் 2,003 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


மேற்குறித்த பரிந்துரையை அமுல்படுத்துவதற்காக நேற்று முன்தினம் நடைபெற்றஅமைச்சரவையில் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட அலுவலர் குழுவின் இரண்டாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் தீக்‌ஷன முதலிடம்





இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான மகீஷ் தீக்‌ஷன ஒருநாள் தொடருக்கான பந்துவீச்சாளர்களுக்கான பட்டியலில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஒருநாள் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான மகீஷ் தீக்‌ஷன முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

அத்துடன் குறித்த பட்டியலில் ஆப்கானிஸ்தான் அணியின் ரஷித் கான் இரண்டாவது இடத்திலும், நமீபியா அணியின் பெர்னார்ட் ஷோல்ட்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் சுப்மன் கில் முதலாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

மேலும் பாகிஸ்தான் அணியின் பாபர் அசாம் இரண்டாம் இடத்திலும், இந்திய அணித்தலைவர் ரோஹித் சர்மா மூன்றாமிடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பாகிஸ்தான் சொதப்பல் நியூசிலாந்து அசத்தல்




சம்பியன்ஸ் டிராபிலீக்போட்டியில் நியூசிலாந்திடம் வீழ்ந்தது பாகிஸ்தான்.

பாகிஸ் தான் அணி, டுபாயில், ஐ.சி.சி., சம்பியன்ஸ் டிராபி 9 ஆவது சீசன் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

கராச்சியில் நடந்த முதல் போட்டியில் "நடப்பு சம்பியன்" பாகிஸ் தான், நியூசிலாந்து அணிகள் மோதின. "டாஸ்" வென்ற பாகிஸ்தான் கப்டன் ரிஸ்வான் "பீல்டிங்" தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணிக்கு கான்வே (10), வில்லியம்சன் (1), டேரில் மிட்செல் (10) ஏமாற்றினர். பின் இணைந்த வில் யங், டாம் லதாம் ஜோடி விக்கெட் கைகொடுத்தது. பொறுப்பாக ஆடிய வில் யங், ஒருநாள் போட்டியில் தனது 4 ஆவது சதத்தை பதிவு செய்தார். நான்காவது விக்கெட்டுக்கு 118 ரன் சேர்த்த போது நசீம் ஷா பந்தில் வில் யங் (107) அவுட்டானார். மறுமுனையில் அசத்திய லதாம், ஒருநாள் போட்டியில் தனது 8 ஆவது சதத்தை எட்டினார். அபாரமாக ஆடிய பிலிப்ஸ், 34 பந்தில் அரைசதம் விளாசினார். இவர், 39 பந்தில், 4 சிக்சர், 3 பவுண்டரி உட்பட 61 ரன் எடுத்து அவுட்டானார்.

நியூசிலாந்து அணி 50 ஓவரில், 5 விக்கெட்டுக்கு 320 ரன் எடுத்தது. லதாம் (118*) அவுட்டாகாமல் இருந்தார். பாகிஸ்தான் சார்பில் நசீம் ஷா, ஹாரிஸ் ராப் தலா 2 விக்கெட் கைப்பற்றினர்.


கடின இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு சவுத் ஷகீல் (6), கப்டன் முகமது ரிஸ்வான் (3) ஏமாற்றினர். பகார் ஜமான் (24), சல்மான் ஆகா (42) ஓரளவு கைகொடுத்தனர். பொறுப்பாக ஆடிய பாபர் ஆசம் (64), குஷ்தில் ஷா (69) அரைசதம் கடந்தனர். ஷகீன் ஷா அப்ரிதி (14), நசீம் ஷா (13), ஹாரிஸ் ராப் (19) நிலைக்கவில்லை.

பாகிஸ்தான் அணி 47.2 ஓவரில் 260 ரன்னுக்கு "ஓல்-அவுட்" டாகி தோல்வியடைந்தது. நியூசிலாந்து சார்பில் ஓரூர்கே, சான்ட்னர் தலா 3, மாட் ஹென்றி 2 விக்கெட் சாய்த்தனர். ஆட்ட நாயகன் விருதை நியூசிலாந்தின் டாம் லதாம் வென்றார். (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3297

### சசிகரன்

எனக்கு இட்லியைப் பிடிக்காது,
தோசை தான் பிடிக்கும்




ஏன் என்றால் இட்லி கூட்டமா வேகும்
தோசை சிங்கிளாத்தான் வேகும்

### இந்திரா




### கிங்ஸ்லி

மனைவி (கோபத்துடன்) நீங்கள் ஏன் என் பிறந்தநாளை ஞாபகம் வைக்கவில்லை?
கணவன்: எப்படி ஞாபகம் வைத்திருக்கிறது... உனக்கு வயது கூடின மாதிரியே இல்லை. எப்பவும் பார்க்க இளமையாகவே இருக்கிறாய்..
மனைவி (வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே) போங்க.. நீங்கள் எப்பவுமே இப்படித்தான்.
கணவன்: (மைன்ட் வாய்ஸ் இல்).. தப்பிச்சேண்டா சேகரு....

### அலஜோய்

என்ன தான் நாம பெரிய ஆளாக இருந்தாலும்
இரண்டு செருப்பை ஒரே நேரத்தில்
போடவும் முடியாது...



கழற்றவும் முடியாது...

### ஆன்

நேரத்தை மிச்சம் செய்ய
போனையும் கம்பியூட்டரையும்
கண்டுபிடித்தான் மனிதன்



அதிலேயே நேரத்தை காலி செய்பவன்
பெரிய மனிதன். அது யாரு... நாம தான்..

### பிலிப்

பெண்களோட விசேட குணம் என்னவென்றால்





அவங்கள் சந்தோசமா இல்லை என்றால்
யாரையும் சந்தோசமாக இருக்க
விடமாட்டாங்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
01 * 01 * 1936



இறப்பு
19 * 02 * 2025

## உயர்திரு. செல்லையா பொன்னுசாமி
## (S.P. சாமி)

**ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்.**

Founder, Chairman- Northern Central Hospital (pvt) Ltd., Northern Publications (pvt) Ltd., Northern Beach Hotel (pvt) Ltd., S.P. Samy Investment Complex (pvt) Ltd., United Merchant Ltd.

**முன்னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,**
**தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம்,**
**முன்னாள் உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம், உபதலைவர் - சேர்பொன்னம்பலம் அருணாச்சலம் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்.**

வேலணை கிழக்கு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெருலேன், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுசாமி அவர்கள் கடந்த (19.02.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான மருதையா - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் வீரலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவகுரு மற்றும் சபாரட்ணம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், ராசபூபதி மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திலகவதி, யோகவதி, சிவமணி மற்றும் மங்கையக்கரசி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, நந்தினி, கணேசராஜா, கேசவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்கோ, ரவிசங்கர், சாந்தி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்சுருதி, சுவாதி, அபிராமி, ஆரணி, கௌதம், அஸ்வினி, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணி முதல் இல 44, செட்டித்தெருலேன், நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அஞ்சலிக்கூட்டம் நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 44,**
**செட்டித்தெருலேன், நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே: 0777318740**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து
# மோசடியில் ஈடுபடும் பெண்

(யாழ்ப்பாணம்)

**வெளிநாடுகளில் இருந்து வருவோரை இலக்கு வைத்து நன்கொடைகள் மருத்துவ உதவிகள் எனக் கோரி வருவோர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்,**

யாழ்.நகர் மற்றும் புற நகர் பகுதிகளில் அண்மைக் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்திருக்கும் நபர்களின் வீடுகளை இலக்கு வைத்து செல்லும் பெண்ணொருவர் தான் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனவும், தனக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது எனவும் போலியான மருத்துவ அறிக்கைகளை காண்பித்து பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் தனக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள பண உதவிதேவை எனக்கூறி 50 ஆயிரம் ரூபாய் பணத்தினை மோசடியாக பெற்றுச் சென்றுள்ளார்.

பணத்தினை கொடுத்த வெளிநாட்டவர் அது தொடர்பில் தனது உறவினர்களுக்கு தெரிவித்த போதே குறித்த பெண் வெளிநாடுகளில் இருந்து வந்திருந்த வேறு நபர்களிடமும் பணத்தினை வாங்கியுள்ளமையை உறவினர்கள் கூறியுள்ளனர்.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயம் அவருக்கு தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால், விசாரணை நடவடிக்கைகளால் தான் நாட்டுக்கு திரும்ப முடியாது காலதாமதம் ஏற்படும் என கருதி முறைப்பாடு செய்யவில்லை எனவும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மோசடி பெண் குறித்து தகவல்களை தெரிவித்துள்ளார்.

பெண்ணின் மோட்டார் சைக்கிள் இலக்கம் , பெண் தொடர்பான அடையாளங்களை பொலிஸாருக்கு தெரிவித்தமையின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-33)



யாழ்.இந்துக் கல்லூரியில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற சொல்லாடல் நிகழ்வில் வருடாந்தம் வழங்கி வைக்கப்படும் "இந்துவின் ஆதர்ஷனம்" விருது யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு வழங்கி வைக்கப்பட்டது. (படம்:சிவசாந்தன்)

## தாய்மொழி நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியும் யாழ்.தமிழ் சங்கமும் இணைந்து நடத்தும் தாய்மொழி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.தமிழ் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரும் விரிவுரையாளருமான கவிஞர் வேல் நந்தகுமார் சிறப்புரை ஆற்றவுள்ளார். (6-8-33)

## மோசடி செய்த குற்றச்சாட்டில் வங்கி முகாமையாளர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வசிப்பவரின் நிலையான வைப்பு பணத்தினை மோசடி செய்த குற்றச்சாட்டில் வங்கி முகாமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் ஒருவர் நீண்ட காலத்திற்கு நிலையான வைப்பில் பெருந்தொகை பணத்தினை வைப்பிலிட்ட பின்னர் வெளிநாடு ஒன்றுக்கு சென்றுள்ளார்.

இந் நிலையில் அவர் திடீரென நாடு திரும்பி தனது நிலையான வைப்பில் உள்ள பணத்தினை மீள பெற வங்கிக்கு சென்ற போதே தனது பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதை அறிந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வங்கியின் முகாமையாளரை கைது செய்து விசாரணைகளின் பின்னர் யாழ்.நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்திய வேளை அந்நபரை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (6-8-33)





யா/கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தின் இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் .கு.திலீபன் தலைமையில் நடைபெற்றது.

### யாழ். மாவட்ட
## பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவராக றஜீவன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவிக்கான நியமனத்தினை ஜனாதிபதியின் உத்தரவின் பெயரில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவனிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை), தீவகம் தெற்கு (வேலணை), நல்லூர், வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரித்து விட்டதாக விமர்சிக்கின்றனர்

## வேட்பாளர் தெரிவுக் கூட்டத்தில் சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நாங்கள் பிரித்து விட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதியின் உள்ளூராட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் ஆலோசனைக் கூட்டம் மந்திகை மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சி தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ...யிடுவது என்ற முடிவை சென்ற தடவை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே நாங்கள் எடுத்திருந்தோம். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்றாக ஆட்சியமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரித்துவிட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் இந்தத் தேர்தல் முறைமையைக் கருத்தில் கொண்டு தனியாக ஒரு கட்சி ஆட்சியமைப்பது மிகவும் கஷ்டமான விடயம் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் முறைமையை எப்படி எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது என்பது குறித்து ஒவ்வொரு சபையாக நாங்கள் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது என தெரிவித்தார். (6-8-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாய்ப்புற்று நோய்க்கான அறிகுறிகள்

## வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க

(கொழும்பு)


**பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாய்ப்புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் காணப்படுவதாக வாய்ப்புற்றுநோய் வைத்திய நிபுணர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில். நாட்டில் நாளாந்தம் 3 முதல் 4 பேர் வரை வாய்ப்புற்று நோயால் உயிரிழப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒவ்வொரு வருடமும் இலங்கையில் 2,000 முதல் 3,000 வரையிலான வாய்ப்புற்று நோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர். (நி-8)

## அமெரிக்கத் தூதுவர்- கடற்படை தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் கடற்படை தளபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பானது கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த உத்தியோகபூர்வ சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், 26 ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் காஞ்சனா பனாகொடவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து சிநேகபூர்வ கலந்துரையாடல் நடைபெற்றது.(நி-8)

## சுகாதாரப் பணியாளர்களின் கொடுப்பனவுகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை

### நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம்

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் சுகாதாரப் பணியாளர்களின் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் 20 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்று கூடியிருந்தன.

இதன்படி, அரசாங்கம் தங்களது பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தாத நிலையில், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அத்துடன், சுகாதார தொழிற்சங்கங்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஒருவார காலம் அவகாசம் வழங்குவதற்கும் சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. (நி-8)

## அனைத்து அரச நிறுவனங்களிலும் விசேட பிரிவு

(கொழும்பு)

பயனுள்ள பொது சேவைகளை உறுதி செய்வதற்காக அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளக அலுவல்கள் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழலைத் தடுப்பது, அரசாங்க நிறுவனங்களுக்குள் ஒருமைப்பாடு கலாச்சாரத்தை வளர்ப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்தல், நெறிமுறை நிர்வாகத்தை மேம்படுத்துதல், சட்ட அமுலாக்கத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்துடன் ஒத்துழைப்பது இந்த பிரிவை நிறுவுவதன் முதன்மை நோக்கமாகும்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளக அலுவல்கள் பிரிவை விசேட பிரிவாக் அமைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

முதற்கட்டமாக, அனைத்து அமைச்சரவை அமைச்சுக்கள், மாகாண பிரதம செயலாளர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இது நிறுவப்படும்.

மேலும், இந்த உள்ளக அலுவல்கள் பிரிவுகளை ஸ்தாபிப்பது தொடர்பாக அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்துமூலம் பணிப்புரை விடுத்துள்ளார். (நி-8)


## சுதேச மருத்துவத் திணைக்களம், வட மாகாணம்
### பெறுகைகளுக்கான அழைப்பு
### பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை-2025/2026

1. வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களப் பெறுகைகள் குழுத்தலைவர் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தேவையான பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கான சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோருகின்றார்

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா | உத்தரவாத வைப்புப் பணம் காலம் |
|---|---|---|---|---|
| 01. | NP/22/03/FM09/PDIM/SECURITY/2025 | பாதுகாப்புச் சேவை-2025/2026 | 130,000.00 | 11.07.2025 |
| 02. | NP/22/03/FM09/PDIM/CLEANING/2025 | சுத்திகரிப்புச் சேவை-2025/2026 | 150,000.00 | 11.07.2025 |

2. பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைக்கான விலைக்கேள்விதாரர்கள் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
   - விலைக்கேள்விதாரர் சேவை தொடர்பாக வலுவான வியாபாரப் பதிவு சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.
   - பாதுகாப்புச்சேவைக்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்
3. பொருத்தமான கேள்வி வைப்புப் பணம் ஆவணம் பெறுகைகளுடன் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.
4. தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர் மேலதிக விபரங்களையும் கேள்விப்பத்திர விண்ணப்பங்களையும், மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடக்கு மாகாணம், இல 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினைப் பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கமுடியாத ரூபா 5000.00 காசாக செலுத்தி, ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 21.02.2025 தொடக்கம் 12.03.2025 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் அனைத்தும் 14.03.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 இற்கு முன்பதாகச் சேர்க்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "பெறுகை, பாதுகாப்புச்சேவை / சுத்திகரிப்புச்சேவை-2025/2026, பெறுகை இல... சேவையின் விபரம்: ... தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
7. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது 07.03.2025 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தில் நடைபெறும்.
8. விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் எழுத்து மூலம் அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

(சி-2300)

Dr.திரு.தி.சர்வானந்தன்.
தலைவர், மாகாண திணைக்களப் பெறுகைகள் குழு,
வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,
இல 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
[illegible]
தொலைநகல் : 021-222-0822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

# தேர்தலை நடத்தாவிட்டால் நாட்டைவிட்டு வெளியேற வேண்டி ஏற்படும்!

## உக்ரைன் ஜனாதிபதியை எச்சரிக்கும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

**தேர்தலை நடத்தாமல் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சர்வாதிகாரியாக செயற்பட்டு வருகிறார் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**



அத்துடன் தேர்தலை நடத்துவதற்கு அவர் மறுத்து வருகிறார்.

இதனாலேயே, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோ பைடனுடன் சேர்ந்து போர் நீடித்திருக்க அவர் நாடகமாடி வந்துள்ளார்.

அங்கு தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அல்லது நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஜெலன்ஸ்கிக்கு ஏற்படும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விரைவில் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்திக்க உள்ளேன். ரஷ்யா-உக்ரைன் இடையிலான போரை நிறுத்துவதற்கான முழு முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

அதில் வெற்றியும் பெறுவோம் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி யேற்றுள்ள நிலையில், ரஷ்யா உடனான உறவை புதுப்பிக்க அவர் ஆர்வம் காட்டி வருகிறார்.

உக்ரைன் நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் வென்று ஜெலன்ஸ்கி ஜனாதிபதியானார்.

கடந்த ஆண்டுடன் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. உக்ரைன் சட்டங்களின்படி நாட்டில் போர் நடக்கும் நேரத்தில் தேர்தல் நடத்தத் தேவையில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## தவறான உலகத்தில் வாழ்கின்றார் ட்ரம்ப்

### உக்ரைன் ஜனாதிபதி சாடல்



(கீவ்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "தவறான தகவல் உலகத்தில் வாழ்கின்றார்" என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதியான தன்னை யாராவது மாற்ற விரும்பினால் அது நடைபெறாது எனக் குறிப்பிட்டுள்ள அவர் 58 வீதமான உக்ரைன் மக்கள் தன்மீது நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் குறித்து ரஷ்யா பல பொய்யான தகவல்களை பரப்பி வருவதாக தெரிவித்துள்ள ஜெலன்ஸ்கி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மீது சகலமரியாதையையும் வைத்திருக்கும் அதேவேளை அவர் தவறான தகவல் உலகத்தில் வாழ்கிறார் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதிக்கான மக்கள் ஆதரவு 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையிலேயே உக்ரைன் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தனக்கான மக்கள் ஆதரவு குறித்து பொய்யான புள்ளி விபரத்தை ரஷ்யாவே பரப்பியுள்ளது என ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## சூடானில் உள்நாட்டுப் போர் தீவிரம்

### இராணுவத் தாக்குதலில் 200 பேர் உயிரிழப்பு

(கார்டூம்)

சூடான் நாட்டில் உள்நாட்டு போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இங்கு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில், அவர்களுக்கு எதிராகத் துணை இராணுவம் தீவிரமாகப் போரிட்டு வருகிறது.



இதற்கிடையே, சூடானின் தெற்கு பகுதியின் அல்-கடாரிஸ், அல்-கேல்லவட் கிராமத்தில் துணை இராணுவப் படையினர் பதுங்கி இருந்து செயற்படுவதாக அந்நாட்டின் இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது.

இதனால் இராணுவத்தினர் அங்கு களம் இறக்கப்பட்டனர். தொடர்ந்து ராக்கெட் குண்டுகளை வீசியும் துப்பாக்கிச் சூடு நடத்தியும் பயங்கரத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த 3 நாட்களாக நீடித்து வரும் இந்தத் தாக்குதலில் தற்போது வரை 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போரில் இதுவரை அப்பாவிப் பொது மக்கள், இராணுவ வீரர்கள் உட்பட 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## நடுவானில் மோதிய சிறிய ரக விமானங்கள்

- இருவர் உயிரிழப்பு
- அமெரிக்காவில் சம்பவம்

(அரிசோனா)

அரிசோனாவில் இரு சிறிய ரக விமானங்கள் நடுவானில் மோதிக் கொண்ட விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க மாகாணங்களில் ஒன்றான அரிசோனாவின் தெற்கில் உள்ள மரானா விமான நிலையத்திற்குட்பட்ட பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இரு சிறிய ரக விமானங்கள் நடுவானில் மோதியதில், ஒரு விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. ஆனால், மற்றொரு விமானம் வெடித்து சிதறியது. இதில், 2 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த மாதத்தில் வட அமெரிக்காவில் மட்டும் 4 விமான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அலஸ்காவில் வர்த்தக ஜெட் லைனரும், இராணுவ ஹெலிகொப்டரும் மோதிக்கொண்டதில் 67 பேர் உயிரிழந்தனர். அதே போல, பிலடெல்பியாவில் ஒரு மருத்துவ போக்குவரத்து விமானம் விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியாவுக்கான நிதியுதவியை நிறுத்தியது அமெரிக்கா



(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப், பல்வேறு அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார். சட்டவிரோத குடியேற்றம், வரி விதிப்பு உள்ளிட்டவற்றில் அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதற்கிடையே இந்தியாவில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க அமெரிக்கா வழங்கி வந்த 21 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியை நிறுத்துவதாக டிரம்ப் நிர்வாகத்தில் எலான் மஸ்க் தலைமையிலான அரசாங்க திறன் துறை அறிவித்தது. இந்த நிலையில் இந்தியாவுக்கு நிதி உதவியை நிறுத்தியது குறித்து ட்ரம்ப் கூறியதாவது.

இந்தியாவுக்கு நாம் ஏன் 21 மில்லியன் டொலர் கொடுக்க வேண்டும்? அவர்களிடம் நிறையப் பணம் இருக்கிறது.

வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அதிக வரி விகிதங்களைக் கொண்ட இந்தியாவிற்கு அத்தகைய நிதி உதவி தேவையில்லை.

எங்களைப் பொறுத்தவரை உலகில் அதிக வரி விதிக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அவர்களின் கட்டணங்கள் மிக அதிகமாக இருப்பதால் நாங்கள் அங்கு தொழில் செய்ய முடியாது. இந்தியா மற்றும்



பிரதமர் மோடி மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு.

இந்தியர்கள் மீது எனக்கு மரியாதை உண்டு. ஆனால் அவர்களுக்கு ஏன் நாம் பணம் கொடுக்க வேண்டும்? அங்கு வாக்குப்பதிவுக்கு 21 மில்லியன் டொலர்கள் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? இதற்கு அமெரிக்கர்களின் வரிப் பணத்தை செலவழிப்பதை விரும்பவில்லை என அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, ட்ரம்பை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இந்தியாவில் டெஸ்லா தொழிற்சாலை அமைப்பது நியாயமற்றது-ட்ரம்ப்

(வோஷிங்டன்)

இந்தியாற்குள் நுழைய மின்சார கார் உற்பத்தி நிறுவனமான டெஸ்லா சமீபகாலமாக ஆர்வம் காட்டி வருகிறது. ஆனால் வரி விகிதம் காரணமாக டெஸ்லா பின்வாங்கியது.

சமீபத்தில் கார்கள் மீதான சுங்கவரியை 110 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக மத்திய அரசு குறைத்தது. மேலும் குறைந்த பட்சம் 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இந்தியாவில் முதலீடு மற்றும் தொழிற்சாலை அமைக்கும் மின்சார வாகன நிறுவனங்களுக்கு இறக்குமதி வரியை 15 சதவீதம் வரை குறைக்கப்படும் என இந்திய அரசு தெரிவித்திருந்தது.

இதற்கிடையில் 2 நாள் பயணமாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அழைப்பின் பேரில் பிரதமர் மோடி கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது பிரதமர் மோடி எக்ஸ், ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனத்தின் உரிமையாளரான எலான் மஸ்க்கை சந்தித்து பேசினார்.

இந்நிலையில் இந்தியாவில் 13 வகையான பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பை டெஸ்லா நிறுவனம் "லிங்க்ட் இன்" தளத்தில் வெளியிட்டுள்ளது. அதில் ஐந்து வகையான பணிகளுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் டில்லி மற்றும் மும்பையிலும் எஞ்சிய பணிகளுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள் மும்பையில் பணியாற்ற வேண்டும் என அந்த விளம்பரத்தில் கூறப்பட்டு உள்ளது.

இதன்மூலம் டெஸ்லா நிறுவனம் விரைவில் இந்தியாவில் வர்த்தகத்தை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் டெஸ்லா அமெரிக்காவின் வரி விதிப்பை தவிர்க்க இந்தியாவில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இருந்தால் அது மிகவும் நியாயமற்றது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில் "மின்சார வாகனம் தயாரிக்கும் டெஸ்லா, அமெரிக்காவின் வரி விதிப்பை தவிர்ப்பதற்காக இந்தியாவில் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு திட்டம் இருந்தால் அது மிகவும் நியாயமற்றது" எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயணத்தின்போது, கார்கள் மீதான இந்தியாவின் அதிக வரி தொடர்பாக வலியுறுத்தியதை நினைவு கூர்ந்த டொனால்ட் ட்ரம்ப், விரைவில் முன்னதாக உள்ள வர்த்தக ஒப்பந்தத்தை நோக்கிச் செயற்படவும் வரிகள் தொடர்பான மோதலைத் தீர்க்கவும் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவித்தார். (நி-8)

## கொசுவைப் பிடித்தால் சன்மானம் பிலிப்பைன்ஸில் விநோத அறிவிப்பு



(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வரும் நிலையில், கொசுவை உயிருடனோ அல்லது கொன்றோ தந்தால் சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சலை கட்டுப்படுத்த உள்ளூர் நிர்வாகம் நூதன முயற்சி மேற்கொண்டுள்ளது. தலைநகர் மத்திய மணிலாவில் வசிக்கும் மக்கள் கொசுவை உயிருடனோ அல்லது கொன்றோ கொண்டு வந்து தந்தால் 5 கொசுவுக்கு ரூ.1.50 வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், "பொதுமக்கள் வீட்டில் அதிக தண்ணீரை தேக்கி வைத்து கொசுவை உற்பத்தி செய்வார்கள்.

இதனால் தொற்று பாதிப்பு அதிகரிக்குமே தவிர எந்த பலனும் இல்லை" என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிருள்ள கொசுக்கள் புற ஊதா ஒளியைப் பயன்படுத்தி அழிக்கப்பட்டு வருகிறது. "இதுவரை மொத்தம் 21 பேர் வெகுமதியைப் பெற்றுள்ளனர்.

700 கொசுக்களை மக்கள் கொண்டு வந்துள்ளனர்" என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டெங்குவை எதிர்த்துப் போராடுவதில் உள்ளூர் அரசாங்க நிர்வாகிகளின் நல்ல நோக்கங்களைப் பாராட்டுகிறோம்" என்று பிலிப்பைன்ஸ் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் டெங்கு பரப்பும் கொசுக்கள் முட்டையிடும் இடங்களில் தண்ணீர் தேங்குவதைத் தடுப்பது போன்ற தற்போதைய நடவடிக்கைகளை தீவிரப்படுத்த, இந்த பரிசுத் தொகை வழங்கப்படுவதாக உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்சில் இந்த ஆண்டில் மட்டும் 28,234 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 40 சதவீதம் அதிகம் எனத் தரவுகள் தகவல் தெரிவிக்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகதி ரயில் மோதி 5 யானைகள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் மார்க்கத்தில் கல் ஓயாப்பகுதியில் காட்டு யானைக் கூட்டத்துடன் மீனகயா கடுகதி ரயில் மோதி தடம் புரண்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தின் போது 5 காட்டுயானைகள் உயிரிழந்துள்ளன.

இதன் காரணமாக மட்டக்களப்பு மார்க்கத்தில் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (நி-8)



தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினரால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமாகாண கல்வி வலயங்களில் முதன்மை பெற்ற சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை செம்மணி வீதி நல்லூரில் அமைந்துள்ள வெளிக்கள நிலையத்தில் நடைபெற்றது.



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 350 | 300 | 400-500 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 1500 | 1500 | 1200 | 1200-1250 | 1400 |
| தக்காளி | 200 | 130 | 80 | 80 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 250-300 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 240 | 400 |
| கரட் | 800 | 800 | 700 | 750 | 1000 |
| பூசணி | 120 | 120 | 150 | 90 | 200 |
| புடோல் | 200 | 280 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 100-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 300-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 180 | 170 | 240 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 400-450 | 600 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 350-400 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 250 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 350-450 | -- |
| லீக்ஸ் | 450 | 400 | 400 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 260 | 300 | 170 | 300 |
| கறிமிளகாய் | 1000 | 800 | 600 | 600-700 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 2500 | 2000 |
| போஞ்சி | 350 | 250 | 400 | 300-350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 250 | 280 | 250 |
| கீரை - 1 பிடி | 130 | 80 | 100 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200-250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 240 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 450 | 500 | 400-500 | 500 |
| வெங்காயப்பூ | 180 | 180 | 200 | 60-140 | 200 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 100-120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 85 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 100 | 120 |

# இன்று ஒரு தகவல் 327

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## துயர மூட்டைகள்

நம்மைப் போல ஒரு ஆசாமி! அவன் நம்மைப் போல கற்பனை செய்தான். நாம்தான் இந்த உலகத்திலே மிகவும் துன்பப்படுகிறோம். மற்றவர்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று.

அவன் ஒரு நாள் கடவுளை வேண்டினான். சுவாமி! இந்த உலகத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துன்பம் இருக்கலாம். இருந்தாலும் அது எனக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது போல தெரிகிறது. அதனாலே நீங்கள் எனக்காக ஒரு சின்ன உதவி செய்தால் போதும். அது வேறு ஒன்றுமில்லை என்னிடம் இருக்கும் துயரங்களை வேறு ஒருத்தரிடம் கொடுத்திடுங்கள். அவரிடம் இருக்கும் துயரங்களை என்னிடம் கொடுத்திடுங்கள். ஒரு Mutual Transfer! என்று வேண்டிக் கொண்டான்.

அன்று இரவே அவன் ஒரு கனவு கண்டான். வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. அது என்ன சொல்லியது தெரியுமா?

மக்களே! எல்லோரும் அவரவர் துன்பங்களை ஒரு பையிலே போட்டு எடுத்துக்கொள்ளுங்கள்! அப்படி எடுத்துக்கொண்டு நேராக இந்த ஊர் எல்லையிலே இருக்கிற கோவிலுக்கு வந்து சேருங்கள்! என்று கூறியது அந்தக் குரல்.

ஆகா! கடவுள் நம் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்துவிட்டார் என்று மகிழ்ச்சியடைந்தான் இவன்.

உடனே தன்னிடம் இருந்த துன்பங்களை எல்லாம் ஒரு சாக்குப் பையிலே போட்டு எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியிலே வந்தான். தெருவில் இறங்கி நடந்தான். அங்கே பார்த்தால் ஏராளமான ஆட்கள் ஆளுக்கொரு பையைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு சென்றுகொண்டிருந்தார்கள். சிலபேர் மூட்டை கட்டி தலையிலே சுமந்து கொண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

இவன் பார்த்தான் இவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் எல்லோரும் வைத்திருக்கும் பை இவனது பையை விட பெரிதாக இருந்தது. இவனது பை தான் இருப்பதிலேயே சிறியதாக தெரிந்தது.

இப்போது அவன் மறுபடியும் கடவுளை வேண்டினான்.

கடவுளே சூழ்நிலையைக் கவனித்தால் என்னிடம் இருக்கிற பையே பரவாயில்லை என்று தோன்றுகிறது! அதனாலே வேறு பை ஒன்றையும் மாற்ற வேண்டாம். இந்தப் பையோடு திரும்ப வீட்டுக்குப் போனால் போதும்! என்று நினைத்தான்.

எல்லோரும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். கோயிலிலே அந்தக் குரல் மறுபடியும் கேட்டது.எல்லோரும் அவரவர் பைகளை சுவரிலே தொங்க விட்டார்கள். திடீரென்று விளக்குகள் அணையும்! மணி அடிக்கப்படும். அதுதான் அடையாளம். அந்த சமயத்திலே இருட்டில் உங்களுக்கு வேண்டிய பையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். வெளிச்சம் வந்ததும் உங்களுக்குப் பிடித்த பையைப் பார்த்து நீங்கள் நிற்கலாம் என்றது அந்தக் குரல்.

திடீரென்று விளக்கு அணைந்தது. மணி அடித்தது. கொஞ்சநேரம் கழித்து மறுபடியும் விளக்குகள் எரிந்தது. இப்போது பார்த்தால் எல்லாரும் அவர்கள் பையை இறுக்கமாகப் பிடித்து நிற்கிறார்கள்.இவனும் அப்படியே நிற்கிறான். இவன் மெதுவாக பக்கத்திலே நிற்கிறவனிடம் கேட்டான்.

ஏன் நீங்கள் பையைக் கையிலே வைத்திருக்கிறீர்கள். சுவரிலே மாட்டவில்லையா என்றான். இல்லை! நீ ஏன் கையிலேயே வைத்திருக்கிறாயோ அதே காரணத்துக்காகத் தான் நாங்களும் வைத்திருக்கிறோம். நம் கவலைகளைப் பற்றி நமக்கு ஓரளவாவது தெரியும். ஆனால் மற்றவர்கள் கவலைகள் நமக்குப் பரீட்சயம் இல்லாதது! பழக்கமில்லாதது! நமக்கு தெரிந்த கவலைகளைச் சமாளிப்பது சுலபம். தெரியாததை சமாளிப்பது என்றால் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டும்! அதனால் பழைய நண்பர்களோடு வாழ்வது மேல்! என்றான்.அதன் பிறகு அவன் தன்னுடைய பைகளே போதும் என்று வீட்டுக்குத் திரும்பினான். இது ஒரு பெரியவர் சொல்லிய கதை. அதனாலே நம்மிடம் இருக்கும் துன்பங்கள்தான் பெரியது. அதை இன்னொருத்தனிடம் கொடுத்து மாற்றுவது எல்லாம் தவறு. இதே மாதிரி இன்னொரு சம்பவம்.

ஒரு ஊரிலே ஒருநாள் இரவு ஆகாயத்திலிருந்து கடவுளின் குரல் கேட்டது. இந்த ஊரில் இருக்கும் மக்களிலேயே கொஞ்சம் கூட கவலையே இல்லாத ஆள் யார் என்று எனக்குத் தெரியும். அதனாலே எல்லாரும் அவரவர் கவலைகளை ஒரு பையிலே போட்டுக் கொண்டு கோவிலுக்கு வாருங்கள் என்றார் கடவுள்.

உடனே வரிசையாக எல்லோரும் வர ஆரம்பித்தார்கள். எல்லோருடைய கையிலேயும் பை இருந்தது. சிறிதாகவும் பெரிதாகவும். கவலை இல்லாத ஆள் யார் என்று தேடினார் கடவுள். ஒரே ஒரு ஆள் மட்டும் கையில் எதுவும் இல்லாமல் வெறுங்கையை வீசிக்கொண்டு ஜாலியாக நடந்து வந்து கொண்டிருந்தான். கடவுள் அவனிடம் சென்றார். உனக்குக் கவலை இல்லையா என்று கேட்டார். எனக்கும் சில கவலைகள் உண்டு என்றான் இவன். எங்கே அது எல்லாம் என்று கேட்டார் கடவுள். பின்னால் லொறியிலே வந்து கொண்டிருக்கிறது. என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளைப் பார்வையிட மன்னார் வரும் பார்வையாளர்கள்



(மன்னார்)

இம் மாத ஆரம்பத்தில் இருந்து வெளிநாட்டு பறவைகளின் வரவு மன்னார் மாவட்டத்தில் காணப்படுகிறது. குறிப்பாக சதுப்பு நிலங்களை அண்டிய பகுதிகளில் உள்ளூர் பறவைகளுடன் இணைந்து உணவு உண்ணும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் மன்னார் மாவட்டத்தில் முன்னைய ஆண்டுகளில் அதிகளவான பறவைகள் வருகை தந்த நிலையில் இம்முறை பறவைகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரான காலப்பகுதியில் இவ்வாறான பறவைகளின் வருகை குறைவடைந்துள்ளதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். சுற்றுலா பயணிகள் தற்போது குறித்த பறவைகளைப் பார்வையிட மன்னார் பகுதிக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர். (6-8-285)

# 4 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

(மன்னார்)

அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் 1 படகுடன் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இராமேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என கடற்படையினர் தெரிவித்தனர்.

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் வடமத்திய மாகாண கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 4 இந்திய மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் சம்மந்தப்பட்ட 4 மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (6-8-285)

# வீடொன்றிற்குள் புகுந்து தாக்குதல்; மூவர் படுகாயம்

## வத்திராயனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நபரொருவர் வவுனியா பகுதியில் இருந்து காரில் ஆட்களை ஏற்றி வந்து வீட்டிற்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

வாகனத்தில் வருகை தந்த தாக்குதல் கும்பல் வாகனத்திற்குள் வாள்களை மறைத்து வைத்திருந்ததாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது காயங்களுக்கு உள்ளான மூவரும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந் நிலையில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (6-8)

# திருவாசக முற்றோதலும் பிரதோஷ பூசையும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை மறுதினம் காலை 7 மணி தொடக்கம் திருவாசகம் முற்றும் ஓதும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோஷ விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

# கனிய மணல் அகழ்விற்கு இடமளிக்கப்படமாட்டாது

## ஜெகதீஸ்வரன் எம்.பி

(குருமன்காடு)

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வியல், பொருளாதாரம் பாதிக்கும் வகையில் கனிய மணல் அகழ்வுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் நேற்று முன்தினம் கனிய மணல் ஆய்வு செய்ய வருகை தந்த குழு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக குறித்த ஒரு நிறுவனம் ஆய்வினை மேற்கொள்ள வந்ததாக தகவல் கிடைத்திருந்தது.

இது தொடர்பாக உடனடியாக குறித்த அமைச்சுக்களுக்கு தெரியப்படுத்தி உடனடியாக அந்த செயற்பாட்டை நிறுத்துவதற்குரிய பணிப்புரையை விடுத்திருந்தோம்.

எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாத வண்ணம் எமது அரசாங்கம் செயற்படும். கடந்த கால அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுமதிகள் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்படும். இது தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. இது மக்களுக்கான அரசாங்கம். மக்களுக்காகவே செயற்படும் எனத் தெரிவித்தார். (6-8-250)

# நந்திக்கடலில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட அறுவர் கைது

## இருவர் பிணையில் விடுவிப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்டவிரோதமாக அனுமதியற்ற முறையில் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்டவிரோதமாக அனுமதியற்ற சட்ட விரோத படகு, வலைகள், கூட்டு வலைகளை பயன்படுத்தி தொடர்ச்சியான முறையில் தொழிலில் ஈடுபட்டதை தொடர்ந்தே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் இரு சிறுவர்களையும் பிணையில் விடுவித்ததுடன் ஏனைய 4 பேரையும் நீதிமன்றில் முற்படுத்தி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்வள திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும், வட்டுவாகல் கடற்றொழில் கூட்டுறவு சங்கத்தினரும், செல்வபுரம் கடற்றொழில் கூட்டுறவு சங்கத்தினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து சட்டவிரோத தொழிலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# இராசிபலன்

21.02.2025
மாசி 09, வெள்ளிக்கிழமை
அட்டமி முற்பகல் 9.28 மணிவரை

அனுசம் பிற்பகல் 1.36 மணிவரை
சுபநேரம் 6.31-8.01 மணிவரை
இராகுகாலம் 11.01-12.31 மணிவரை
அட்டமி-நவமி

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை.

வளவன்

**மேஷம்** — உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**கடகம்** — தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**துலாம்** — தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**மகரம்** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பயணங்கள் வாய்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திடீர் பணவரவால் சந்தோசமடைவீர்கள்.

**ரிஷபம்** — நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** — உறவினர் பகை அகலும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்கள் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**கும்பம்** — செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.

**மிதுனம்** — கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபாரவிருத்தியுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும்.

**கன்னி** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** — எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** — குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், நண்பர்களால் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்கள் பலனுண்டு.

வாங்கும் போது நண்பன் கேட்கும் போது பகைவன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன் 708

பாகம் - III





ஆனால் அவர் அறியாத இரகசியங்களும் என் நெஞ்சில் இருக்கின்றன. சுந்தர சோழர் கொடிய நோய் வாய்ப்பட்டிருக்கிறார். பல காரணங்களினால் அவர் மனம் ஏற்கனவே புண்ணாகியிருக்கிறது. சிற்றரசர்களின் சதிச் செயலைப் பற்றி அவரிடம் சொல்லி மேலும் அவர் நெஞ்சைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதற்கு அவசியமும் ஏற்படவில்லை.

இளவரசே! தங்களுடைய காரியங்களைப் பற்றிய வரையில் நான் சக்கரவர்த்தியிடம் ஒரு நாளும் சொல்ல மாட்டேன். தாங்கள் நம்பியிருக்கலாம்."

"ஐயா! அன்பில் அநிருத்தரே! இந்தப் பேதை மதுராந்தகன் பேரில் தங்களுக்குத் திடீரென்று இவ்வளவு அபிமானம் தோன்றக் காரணம் என்ன?" என்று மதுராந்தகன் கேட்டு விட்டு ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

"இளவரசே! தங்களிடம் திடீரென்று எனக்கு அபிமானம் பிறந்துவிடவில்லை. சுந்தர சோழரின் புதல்வர்களைப் போலவே தான் தங்களிடமும் நான் எப்போதும் அபிமானம் வைத்து வந்திருக்கிறேன். அதைக் காட்டிக் கொள்வதற்கு இதற்கு முன்னால் சந்தர்ப்பம் ஏற்படவில்லை."

"இன்றைக்கு அச் சந்தர்ப்பம் கிடைத்தது! நான் குதிரை மேலிருந்து விழுந்து காலை ஒடித்துக் கொண்டால் ஏற்பட்டது. ஆனாலும் சில நாளைக்கு முன்னாலேயென்றால் என்னை அந்த மரத்தடியிலேயே கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு வந்திருப்பீர்"

"நாராயணர் நாராயணா! இது என்ன வார்த்தை இளவரசே!

ஐயா! எனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ண வேண்டாம். எதைச் சொன்னாலும் நம்பக்கூடிய அப்பாவி என்று நினைக்க வேண்டாம். நான் என் தாயாரின் கர்ப்பத்தில் இருந்தபோதே எனக்கு எதிராக நீர் சதி செய்யத் தொடங்கினீர்.

நான் இந்தப் பூமியில் பிறந்ததும் என்னைக் கொன்றுவிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தீர். அதோ உம்முடைய முகத்தில் ஆச்சரியத்தின் அறிகுறியைக் காண்கிறேன். அதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்படைகிறீர் இல்லையா? இந்தச் சோழ நாட்டில் பயங்கர இரகசியங்கள் பலவற்றை அறிந்தவர் நீர் ஒருவர்தான் என்று எண்ண வேண்டாம்!

அநிருத்தரின் முகம் இப்போது உண்மையாகவே அதிசயமான காட்சி அளித்தது. அதில் கணத்துக்கு ஒரு சாயல் தோன்றி மறைந்தது. கடைசியில் வருந்தி வருவித்துக் கொண்ட புன்னகையுடன் முதன் மந்திரி "ஆம், இளவரசே! நான் அவ்விதம் இறுமாந்திருந்தது உண்மைதான். இன்றைக்குக் கர்வ பங்கமாயிற்று. தாங்கள் பிறந்தவுடனே சிசுஹத்தி செய்ய ஏற்பாடு நடந்திருக்கும் பட்சத்தில் தாங்கள் எப்படிப் பிழைத்தீர்கள்? அந்த இரகசியத்தையும் கூறி விட்டால் கிருதார்த்தனாவேன்! என்றார்.


"எனக்கு எவ்வளவுதான் தெரியும் என்று சோதிக்கிறீர் போலும்! நல்லது. சொல்கிறேன். சிசுஹத்தி செய்வதற்கு தாங்கள் ஏற்பாடு செய்திருந்தவர்கள் குழந்தை பிறந்ததும் ஆணா பெண்ணா என்று கூடப் பாராமல் அவசரப்பட்டு எடுத்துக் கொண்டு போனார்கள். பெண் குழந்தை என்று தெரிந்ததும் தங்களிடம் வந்து சொன்னார்கள்.

பிழைத்துப் போகட்டும் என்று அக் குழந்தையைக் கோயில் பட்டர் ஒருவரிடம் ஒப்புவித்து வளர்க்கச் சொன்னீர்கள். பெண் குழந்தை பிறந்த அரை நாழிகை நேரத்தில் நான் பிறந்தேன். அதை நீங்கள் எதிர்பார்க்கவேயில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## நல்லொழுக்கம்



முன்னொரு காலத்தில் பாலு என்ற ஒரு பையன் இருந்தான். ஒரு நாள் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும் போது வழியில் நாயுடு என்பவரது தோட்டத்தில் இருக்கும் கீரைச் செடிகளைப் பாலு பார்க்கிறான்.

பாலுவிற்கு பாலக் கீரை என்றால் ரொம்ப பிடிக்கும். அதில் கொஞ்சக் கீரைகளை பறித்து அதை வீட்டுக்குக் கொண்டு சென்றான்.

வீட்டுக்கு போனதும் தன் அம்மாவிடம் போய் "அம்மா அம்மா நான் கொஞ்சம் கீரைகளைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை வைத்து சுவையான சாப்பாடு செய்து தருவீர்களா!" என்று கேட்டான் பாலு.

எங்கிருந்து இந்தக் கீரைகளை கொண்டு வந்தாய் என்று அம்மா கேட்டார்.

அதற்கு பாலு நான் இதை நாயுடு அவர்களின் தோட்டத்தில் இருந்து கொண்டு வந்தேன் என்று அப்பாவியாகச் சொன்னாலும் உண்மையில் பாலு கீரைகளைத் திருடிக் கொண்டு வந்தான்.

ஆனால்! அவனது அம்மா நினைத்தார் பாலு இன்னும் சின்னப் பையன் தெரியாமல் கீரைகளைப் பறித்து வந்திருப்பான் என்று அவனை எதுவும் சொல்லவில்லை.

அவன் அம்மா அவனுக்கு அந்த கீரைகளை வைத்து அன்று இரவு சுவையான சாப்பாடு செய்து கொடுத்தார்.

கொஞ்ச நாளுக்குப் முன்னால் கொண்டு வந்தது போல ஒரு மரத்திலிருந்து மாங்காயைப் பறித்து அதை வீட்டுக்குக் கொண்டு வந்து அவன் அம்மாவை மாங்காய் பருப்பு செய்ய சொன்னான். முன்னர் போலவே அவன் அம்மா அவனைத் திட்டவில்லை.

பாலு மிகவும் குறும்பானவனாக ஆகி விட்டான் என்று நினைத்து அவனுக்குச் சுவையான சாப்பாடு செய்து கொடுத்தார். அவன் அதைச் சந்தோஷமாகச் சாப்பிட்டான்.

ஒரு நாள் முதல் செய்ததைப் போல பாலு பழங்களைப் பறிக்கும் போது தோட்டக்காரர் அவனைக் கையும், களவுமாகப் பிடித்தார்.

அவனை அவன் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் அவர்களின் அம்மாவிடம் அவனது திருட்டைப் பற்றிச் சொன்னார். பாலுவின் அம்மாவுக்கு ரொம்ப கோபம் வந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் என்பது, சரியான செயலை செய்வதை எவரும் தடுக்க முடியாத நிலையும், தவறான செயலை செய்யத் தூண்டாத நிலையுமாகும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீதியின் இருப்பிடம் வரை சென்றுவிட்ட துப்பாக்கிச் சூடு

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கணேமுல்ல சஞ்சீவ என்ற நபர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுமையிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் சஞ்சீவ கடந்த ஒன்றரை வருடங்களாக சிறையில் இருந்துள்ளார்.

நீதிமன்ற விசாரணையின் பொருட்டு கொழும்பு புதுக்கடை நீதிமன்றுக்கு அவர் அழைத்து வரப்பட்டு சாட்சிக்கூண்டில் ஏறி நின்றபோது, இந்தத் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப் பட்டுள்ளது.

சட்டத்தரணி போல நீதிமன்றுக்குள் நுழைந்த கொலைச்சூத்திரதாரி நீதிமன்றில் சட்டத்தரணிகள் அமர்ந்திருக்கின்ற இடத்தில் இருந்து கொண்டு சஞ்சீவவை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார்.

சுருங்கக்கூறின் திரைப்படப் பாணியில் இக்கொலைச் சம்பவம் நடந்துள்ளது.

தவிர, நீதிமன்றுக்கு சஞ்சீவ அழைத்து வரப்பட்டபோது, அவருக்கு விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

இருந்தும் நீதிமன்றத்துக்குள் வைத்து பிரஸ்தாப நபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இஃது சம்பவத்தின் சுருக்கம்.

நீதிமன்றுக்குள் வைத்து, சட்டத்தரணி வேடத்தில் வந்த நபரால் நிகழ்த்தப்பட்ட இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

அதிலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் நடந்த இந்தச் சம்பவத்தை எதிர்க்கட்சிகள் தூக்கித் துலாம்பரப் படுத்துவர் என்பதில் ஐயமில்லை.

அதிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பணியில் இருந்த படை யினரை அரசாங்கம் மீளப் பெற்றுக் கொண்ட நிலையில், மேற்குறித்த சம்பவத்தை மகிந்த தரப்பு நிச்சயம் தமக்குச் சாதமாக்க முற்படும் என அனுமானிக்கலாம்.

இதையும் கடந்து நாட்டின் பாதுகாப்பு அதிலும் குறிப்பாக, நீதித்துறைக்கான பாதுகாப்புக் குறித்து எதிர்க்கட்சிகள் கணை தொடுப்பர் என்பதிலும் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

இஃது ஒருபுறமிருக்க, பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய நபர் ஒருவர் நீதிமன்றத்துக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் எனும்போது, அவர் முக்கிய தகவல்களை நீதிமன்றத்தில் தெரிவித்துவிடலாம் என்பதாக,

கொலை, போதைவஸ்து கடத்தல் போன்ற சம்பவங்களுக்கும் நாட்டின் முக்கிய அரசியல்வாதிகளுக்குமுள்ள தொடர்பை சஞ்சீவ நீதிமன்றில் கூறலாம் என்பதாக, குறித்த கொலைச் சம்பவம் திட்டமிடப்பட்டிருக்கும் என ஊகிப்பதில் தவறில்லை.

எதுஎவ்வாறாயினும் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற கோசத்துக்குள் சிங்களப் பேரினவாதம் மூழ்கிக் கிடக்க, நாடு போதைவஸ்து கடத்தல் மற்றும் கூலிக் கொலை என்ற மிகப்பெரும் பயங்கரத்துக்குள் அகப்பட்டு அல்லல்படுகிறது என்ற உண்மை சஞ்சீவவின் கொலை மூலம் நிரூபணமாகியுள்ளது.

### நீதிமன்றத்தினுள் இடம்பெற்ற படுகொலை பாரதூரமானது

# உடனடியாக விசாரணைகள் மேற்கொண்டு தீர்வை வழங்கும் பொறுப்பை அரசு ஏற்கும்

### நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

நீதிமன்றத்தினுள் கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்பட்ட சம்பவம் மிகப்பாரதூரமானது எனவும் இது குறித்து உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுத் தீர்வை வழங்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கணேமுல்ல சஞ்சீவ, நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கு வழக்கொன்றுக்காக அழைத்துவரப்பட்டு, சாட்சிக்கூண்டில் நிறுத்தப்பட்ட போது சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனையடுத்து அவ்விடத்துக்கு விரைந்த நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, நீதிமன்ற வளாகத்துக்குள் செல்ல முற்பட்ட வேளையில், ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இது மிகப்பாரதூரமான விடயம். இதுகுறித்த பொறுப்பை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மிகவலுவான பாதுகாப்புக்கு மத்தியில்தான் "கணேமுல்ல சஞ்சீவ" அழைத்து வரப்பட்டார். இருப்பினும் தற்போது நீதிமன்ற அதிகாரிகளுடன் கலந்துரையாடி இப்பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியிருக்கிறது.

இங்கு பாதாள உலக செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒருவர் மாத்திரமன்றி மேலும் பல அப்பாவி மக்கள் இருக்கிறார்கள். ஆகவே இச்சம்பவம் தொடர்பில் நாம் பொறுப்பேற்றுக் கொள்வதுடன் இதுகுறித்து வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்த முடியும். படுகொலைகள் உள்ளிட்ட இவ்வாறான சம்பவங்கள் எமது ஆட்சியில் மாத்திரமன்றி, கடந்த காலங்களிலும் இடம்பெற்றன. இருப்பினும் அவற்றுக்கு உரியவாறு தீர்வுகாண்பது எமது பொறுப்பாகும். யார் ஆரம்பித்திருந்தாலும், அதனை நாம் முடிவுறுத்துவோம். அதேபோன்று சகல பிரஜைகளினதும் உயிருக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். எனவே அதனைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுப்போம்.

நாம் இப்போது சட்ட மூலமொன்றைத் தயாரித்திருக்கிறோம். அதனூடாக நீதிமன்றத்துக்கு வருகை தராமல், தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நிலையத்தில் இருந்தவாறு காணொளி ஊடாக சாட்சியமளிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படும். அதனை வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும். அதன் மூலம் மிகுந்த அவதானத்துக்குரிய நபர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்றார். (ம-7)

### மாணவர்களைத் தலைக்கவசம் அணியாமல்

# மோ.சைக்கிளில் ஏற்றிச் செல்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

பாடசாலை மாணவர்களை தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்வோருக்கு எதிராக எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஆளுநர், பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் பெற்றோர் உள்ளிட்ட எவரும் மாணவர்களுக்குத் தலைக்கவசம் அணிவிக்காது ஏற்றிச் செல்வதாக முறையிடுகின்றனர்.

குறிப்பாக மருத்துவர்களால் இந்த விடயம் அதிகளவில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. தலைக்கவசம் அணியாது பயணிப்பதால் விபத்துக்களில் மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, சட்டம் ஒழுங்கைப்பேணும் வகையில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். மாணவர்களை அவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் கோரினார்.

அதற்கு யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அதனை இறுக்கமாகப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)

### நீதிமன்றத்தினுள் படுகொலை

# கொலையாளியை ஏற்றி சென்ற வாகன சாரதி கைது

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தினுள் சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக்குழு உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் நேற்று முன்தினம் புத்தளம் பாலவியப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபர் தப்பிச் செல்ல உதவிய வான் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய பெண்ணையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பிரதான துப்பாக்கிதாரி, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 72 மணித்தியாலங்களுக்கு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

### பொருத்தமற்ற சொற்பிரயோகம்

# மன்னிப்புக் கோரினார்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார இணை அமைச்சர் சுனில் வட்டகல தனது ஓட்டுநரை பூருவா (கழுதை) என்று அழைத்தமை குறித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று வருத்தம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திற்குப் பின்னர், நீதிமன்ற வளாகத்தில் இருந்த துணை அமைச்சர் வட்டகல, தனது வாகனத்தை வரவழைக்கும் போது தனது ஓட்டுநரை "பூருவா" என்று அழைத்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

குறித்த ஓட்டுநர் மற்றும் அவரது குடும்பத்தினர் இருவருக்கும் அவமானமாகக் கருதப்பட்ட இந்தச் சொல் குறித்து அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர், சூழ்நிலையின் போது அமைச்சருக்கு ஏற்பட்ட மன அழுத்தத்தை ஒப்புக் கொண்டார்.

எனினும் பொருத்தமற்ற சொற்பிரயோகத்துக்காகப் பிரதி அமைச்சரின் சார்பாக தனது வருத்தத்தைத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள பசுமை ஜதரசன் ஒரு தீர்வாகுமா?

மனித குலம் ஒரு சவாலான காலகட்டத்தில் உள்ளது. காலநிலை மாற்றம் என்ற பதம் நம் கதவைத் தட்டுகிறது. புவி வெப்பமடைதல், தீவிர வானிலை மாற்ற நிகழ்வுகள், கடல் மட்ட உயர்வு போன்ற பிரச்சினைகள் நம் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கி உள்ளன. இந்தச் சவாலை சமாளிக்க நாம் உடனடியாக செயற்பட வேண்டியது அவசியம். இந்தச் சூழலில், பசுமை ஜதரசன் (Green Hydrogen) ஒரு நம்பிக்கையான தீர்வாக உருவெடுத்துள்ளது. இந்த கட்டுரை பசுமை ஜதரசன் என்றால் என்ன, அது எவ்வாறு காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உதவும், அதன் நன்மைகள், சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் என்ன என்பதை விரிவாக ஆராய்கிறது.

**காலநிலை மாற்றம் - மிகப் பெரிய ஆபத்து**

காலநிலை மாற்றம் என்பது புவி வெப்பமடைதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வானிலை முறைகளில் ஏற்படும் நீண்ட கால மாற்றங்களைக் குறிக்கிறது. இது முக்கியமாக கடந்த நூற்றாண்டில் மனித நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பச்சை வீட்டு வாயுக்கள் வெளியேற்றத்தால் தூண்டப்படுகிறது. இந்த வாயுக்கள் சூரியனிடமிருந்து வரும் வெப்பத்தை வளிமண்டலத்தில் சிக்க வைத்து பூமியின் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்கின்றன.

இதன் விளைவாக, பல சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகள் ஏற்படுகின்றன. தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும் போது பூமியின் சராசரி வெப்பநிலை கணிசமாக உயர்ந்துள்ளது. வெப்ப அலைகள், வறட்சி, வெள்ளம், சூறாவளிகள் மற்றும் காட்டுத் தீ போன்ற பேரழிவுகள் அடிக்கடி நிகழ்கின்றன. மேலும் பனிப்பாறைகள் உருகுதல் மற்றும் கடல் நீர் வெப்ப விரிவாக்கம் காரணமாக கடல் மட்டம் உயர்கிறது.

இது தாழ்வான கடலோர பகுதிகள் மற்றும் தீவு நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. காலநிலை மாற்றம் விவசாய உற்பத்தியையும் பாதிக்கிறது. வெப்பநிலை உயர்வு, நீர் பற்றாக்குறை மற்றும் தீவிர வானிலை மாற்ற நிகழ்வுகள் பயிர் விளைச்சலைக் குறைத்து உணவு பாதுகாப்பை கேள்விக்குறியாக்குகின்றன. பல பகுதிகளில் காலநிலை மாற்றம் மழைப் பொழிவின் முறைகளை மாற்றி நீர் பற்றாக்குறையை அதிகரிக்கிறது. இது விவசாயம், தொழில் மற்றும் மனித நுகர்வுக்கான நீரைப் பாதிக்கிறது. வெப்ப அலைகள், காற்று மாசுபாடு மற்றும் தொற்று நோய்கள் பரவுதல் போன்ற காலநிலை மாற்றம் தொடர்பான சுகாதார அபாயங்களும் அதிகரிக்கின்றன.

இந்த காலநிலை மாற்றத்தின் முக்கிய காரணிகளில் ஒன்று படிம எரிபொருட்களான நிலக்கரி, மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எரிப்பது ஆகும். மின் உற்பத்தி, போக்குவரத்து, தொழில் மற்றும் வீடுகளை வெப்பப்படுத்துதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக நாம் இவற்றை பெரிதும் சார்ந்து இருக்கிறோம்.

படிம எரிபொருட்களை எரிக்கும் போது காபனீரொட்சைட்டு (Carbon dioxide - CO2) போன்ற பச்சை வீட்டு வாயுக்கள் வளிமண்டலத்தில் வெளியிடப்படுகின்றன. காலநிலை மாற்றத்தின் தீவிரத்தை குறைப்பதற்கு நாம் படிம எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து சுத்தமான மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களுக்கு மாற வேண்டியது அவசியமாகும். இந்த மாற்றத்தில் பசுமை ஜதரசன் முக்கிய பங்கு வகிக்க முடியும்.


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

**பசுமை ஜதரசன் என்றால் என்ன?**

ஜதரசன் என்பது பிரபஞ்சத்தில் அதிகமாகக் காணப்படும் ஒரு வாயு ஆகும். இது மிகவும் இலேசான மற்றும் அதிகசக்தி அடர்த்தியுள்ள எரிபொருள். ஜதரசன் பல வழிகளில் உற்பத்தி செய்யப்படலாம். ஆனால், பெரும்பாலான தற்போதைய ஜதரசன் உற்பத்தி முறைகள் படிம எரிபொருட்களைச் சார்ந்தே உள்ளன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் ஜதரசன் "சாம்பல் ஜதரசன்" (Grey Hydrogen) என்று அழைக்கப்படுகிறது. சாம்பல் ஜதரசன் உற்பத்தி முறையில் காபனீரொட்சைட்டு அதிக அளவில் வெளியிடப்படுகிறது. இது காலநிலை மாற்றத்தை மேலும் தீவிரப்படுத்தும். மறுபுறம், பசுமை ஜதரசன் முற்றிலும் வேறுபட்டது. பசுமை ஜதரசன் என்பது புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களான சூரிய ஒளி, காற்று அல்லது நீர் மின்சாரத்தை பயன்படுத்தி தண்ணீர் மூலக்கூறுகளை மின்பகுப்பு (Electrolysis) செய்து உற்பத்தி செய்யப்படும் ஜதரசன் ஆகும்.

மின்பகுப்பு என்பது மின்சாரத்தை பயன்படுத்தி தண்ணீரை ஜதரசன் மற்றும் ஒட்சிசனாகப் பிரிக்கும் ஒரு செயல்முறை. இந்த முறையில் காபனீரொட்சைட்டு வெளியேற்றம் முற்றிலும் இல்லை. எனவே பசுமை ஜதரசன் ஒரு தூய்மையான மற்றும் நிலையான எரிபொருள் ஆகும்.

வெவ்வேறு வகையான மின்பகுப்புத் தொழில்நுட்பங்கள் பசுமை ஜதரசனை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொன்றும் அதன் தனித்துவமான நன்மைகள் மற்றும் சவால்களைக் கொண்டுள்ளன. வணிக ரீதியாக மிகவும் முதிர்ந்த மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் கார மின்பகுப்பு (Alkaline electrolysis - AEL) ஆகும். இந்தத் தொழில்நுட்பம் படத்தில் காட்டப்பட்டவாறு, காரக் கரைசலை மின்சாரத்தை கடத்தும் ஊடகமாக பயன்படுத்துகிறது. மின்சாரத்தை செலுத்தும்போது, நீர் எதிர் மின்முனையில் (Cathode) ஜதரசனாகவும், நேர்மின்முனையில் (Anode) ஒட்சிசனாகவும் பிரிகிறது. ஜதரொட்சைட் அயன்கள் மின்சாரத்தை கடத்தும் ஊடகமாக செயற்படுகின்றன. கார மின்பகுப்பு அமைப்புகள் மற்ற தொழில்நுட்பங்களை விட குறைந்த விலை கொண்டவை, நம்பகமானவை மற்றும் நீண்ட ஆயுட்காலம் கொண்டவை. பெரிய அளவிலான ஜதரசன் உற்பத்திக்கு இவை ஏற்றவை. குறிப்பாக உர உற்பத்தி மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற தொழில்துறை பயன்பாடுகளுக்கு சிறந்தது. இருப்பினும் இவை குறைந்த மின்னோட்ட அடர்த்தியில் செயற்படுவதால் பெரியதாக இருக்க வேண்டும்.




**பசுமை ஜதரசனின் நன்மைகள்**

பசுமை ஜதரசன் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு பல முக்கிய நன்மைகளை வழங்குகிறது. பசுமை ஜதரசன் எரிக்கப்படும்போது அல்லது எரிபொருள் கலன்களில் பயன்படுத்தப்படும் போது காபனீரொட்சைட்டு அல்லது பிற தீங்கு விளைவிக்கும் மாசுபடுத்திகள் வெளியிடப்படுவதில்லை.

இதன் விளைவாக சுத்தமான காற்று மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் கிடைக்கும். நீர் மட்டுமே இதன் துணை விளைபொருள். பசுமை ஜதரசன் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதால் இது ஒரு நிலையான எரிபொருள் ஆகும்.

சூரிய ஒளி, காற்று மற்றும் நீர் மின்சாரம் போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் தீர்ந்து போகாது. இவை தொடர்ந்து கிடைக்கக்கூடியவை. மேலும் பசுமை ஜதரசன் மின் உற்பத்தி, போக்குவரத்து, தொழில் மற்றும் வெப்பமூட்டல் போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படலாம். இது ஒரு பல்துறை எரிபொருள் என்பதால் சக்தி தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு முக்கிய தீர்வாக இருக்கும்.

புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்கள் தொடர்ச்சியாக கிடைக்கும் தன்மை கொண்டவையல்ல. அதாவது சூரிய ஒளி பகலில் மட்டுமே கிடைக்கும். காற்று எப்போதும் ஒரே வேகத்தில் வீசுவதில்லை. பசுமை ஜதரசன் அதிகபடியான புதுப்பிக்கத்தக்க சக்தியை சேமித்து தேவைப்படும் போது பயன்படுத்த உதவும். மின் உற்பத்தி குறைவாக இருக்கும் நேரங்களில் சேமிக்கப்பட்ட ஜதரசன் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படலாம். மிகமுக்கியமாக, பசுமை ஜதரசன் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படலாம். இதனால் எரிபொருளுக்காக பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை குறையும். இது எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்யும் மற்றும் இறக்குமதி செலவுகளை குறைக்கும்.

(தொடரும்)

கலாநிதி
அமல்ராஜ் பீற்றர் அமலதாஸ்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பௌதிகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை மாத்...

பிட்டபோது,

இளைஞனிடம் இருந்து 30 போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## தாளையடியில்...

கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படையால் கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 5.640 kg கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60,316)

## நெடுந்தீவு...

படகையும் அதிலிருந்த ஆறு மீனவர்களையும் கைது செய்தனர்.

மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 10 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் தமிழ்நாடு இராமேஸ்வரம் காந்திநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட குறித்த 10 இந்திய மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ம-7,33)

## மின்சாரம்...

எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கு மாகாண...

பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 27.02.2025 அன்று இவ்வாறு விடுமுறை வழங்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

அதற்குப் பதிலாக மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை பாடசாலை நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார். (ம-7)

## சுவிஸ் குமாரை...

தப்பிக்க உதவிய வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது சுவிஸ்குமாரை, பணம் பெற்று தப்பிக்க உதவிய குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்ட நிலையில் அப்போதைய வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், 50 ஆயிரம் ரூபாய் குற்றப் பணமும் அறவிடப்பப்பட்டது.

மற்றைய சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் சிறிகஜனுக்கும் 4 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், குறித்த நபர் நாட்டை விட்டு தப்பிச் சென்றதால் அவருக்கு திறந்த பிடியாணையும் வவுனியா மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. (ம-7,250)

## தனங்களப்பில்...

சனிக்கிழமை பூநகரிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தவேளை தனங்களப்பு பகுதியில் நிறைபோதையில் நின்ற வன்முறைக் கும்பல் அவர்களை வழிமறித்து மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் ஓய்வுபெற்ற அதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய கொடிகாமம் மற்றும் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,30,33)

## புதுக்கடைத்...

தும், நீதிபதிகளினதும், ஊடகவியலாளர்களினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

புதுக்கடை நீதிமன்றத்தினுள் நடந்த கொலை, நீதிமன்றத்தை மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. இது மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். நீதித்துறையில் பெரும் பணிகளை ஆற்றிவரும் நீதிபதிகளுக்கு குறிப்பிட்டளவு பாதுகாப்பு வழங்கப்பட்டாலும் அண்மைய காலங்களில் அவர்களின் பாதுகாப்பை நீக்குவதாக அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிவில் குடிமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் கூட இன்று பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்களை அறிக்கையிடும் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. ஊடகவியலாளரான சம்முதிதவுக்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால் இன்று அந்தப் பாதுகாப்பு அவரிடமிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே விசேடமாக நீதிபதிகளின் பாதுகாப்பு, பொது மக்களினதும், ஊடகத்துறையில் பணியாற்றுபவர்களினதும் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இடம்பெற்ற சம்பவம் பாரிய விடயமாகும். இந்தச் சம்பவம் குறித்து விசேட விசாரணையை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார். (ம-7)

## செம்...

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியை யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா நேற்றுப் பார்வையிட்டார்.

குறித்த மயானப் பகுதியில் குழி வெட்டிய போது அண்மையில் மனித எலும்புகள் மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு நேற்று விஜயம் செய்த நீதவான் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு உரிய அதிகாரிகளுக்கு [illegible] விட்டார்.

அதன்படி குழியில் இருந்து எலும்புகள் மீட்கப்பட்டு பகுப்பாய்வுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அப்பகுதியை ஸ்கானர் இயந்திர உதவியுடன்முழுமையாக பரிசோதனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சட்ட மருத்துவ அதிகாரி, பொலிஸார், தடயவியல் பொலிஸார், நல்லூர் பிரதேச செயலர் என பலரும் பிரசன்னமாகி இருந்தனர். (ம-7,33)

வேலைவாய்ப்பு
யாழ்.நகரப் பகுதிகளில் உள்ள லொத்தர் விற்பனை நிலையங்களில் விற்பனை உதவியாளர்கள் தேவை. பகுதிநேரமாகப் பணிபுரிய விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். விரும்பின் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்து தரப்படும்.
077 843 5224
077 603 1723
(3475)

மஹஜன சம்பத
திகதி 2025.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 5753
M 5 6 4 6 3 5
அத சம்பத M 4 6 3 5
சீட்டிழுப்பு இலக்கம் 0328
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1783
K 01 46 68 74 K
50778

மெகா பவர்
திகதி 20/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2101
Z 22 06 20 35 46

ஜய
திகதி 2025.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 021
E 3 8 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3995
சீட்டிழுப்பு திகதி 20.02.2025
H 23 49 62 80
H

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 1062
மீனம் 09 17 47 52 மீனம்
93109 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.02.2025 வெற்றி வாரம் 461
S 5 7 4 1 1 6
78994
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,528,416.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2727
சீட்டிழுப்பு திகதி 2025.02.20 தினம் வியாழக்கிழமை
06 35 39 56 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,453,903.20

சனிதா
திகதி 20.02.2025 வெற்றி வாரம் 4888
14 54 67 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,152,428.80
ரூ. 100,000/- 59549

சசிரி
வெற்றி வாரம் 626
20.02.2025 வியாழக்கிழமை
14 48 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4439
சீட்டிழுப்பு திகதி 20.02.2025 தினம் வியாழக்கிழமை
11 15 25 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.13,255,082.40
274621

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 32 13 38 46 68
1903
20.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,992,042.60

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2553
சீட்டிழுப்பு திகதி 2025.02.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,332,588.80
06 15 28 49 H
694032

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த

(கொழும்பு)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பல்களுக்கு இடையேயான சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையே நீண்டகாலமாக நிலவி வந்துள்ள மோதல்களின் விளைவாகவே இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தனிப்பட்ட தகராறுகளால் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் மட்டுமே பதிவாகியுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

தனிப்பட்ட தகராறு சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தேசிய பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தேசிய பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகக் கூறி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ நேற்றைய தினம் வியாழக் கிழமை பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்தார். (ம-7)

# சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்தி விட்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிடுவது பயனற்றது - அனுராத

சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்திவிட்டு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிடுவது பயனற்றது. புலனாய்வு பிரிவின் தகவல்களுக்கு அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல், பாரிய விளைவுகள் ஏற்படும் என முன்னாள் நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று(20) வியாழக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, நாட்டின் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தாமல் நாடு என்ற ரீதியில் எவ்வாறு முன்னோக்கிச் செல்லலாம் என்பது சந்தேகத்துக்கிடமானது.

2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போது புலனாய்வு பிரிவுக்கு விசேட தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது. புலனாய்வு தகவலில் "குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் எவரேனும் சட்டத்தரணியை போன்று நடமாடி ஆயுதம் அல்லது பிறிதொரு வகையில் பாதிப்பை ஏற்படுத்தும் உபகரணத்துடன் நீதிமன்ற வளாகத்துக்குள் பிரவேசிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலை காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நீதி இராஜாங்க அமைச்சராக நான் பதவி வகித்தேன். புலனாய்வு பிரிவின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டதால் பாரிய விளைவு அப்போது தடுக்கப்பட்டது. நாட்டின் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தும் இடத்தில் நீதிபதி முன்னிலையில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற நிலையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம் என்று குறிப்பிட முடியாது என்றார். (ம-7)

## பாதாள உலகத்துக்கு...

இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வ நிறுவனங்களில் சில நபர்கள் வரையில் பாதாள உலகத்தின் செயற்பாடுகள் விரிவடைந்திருப்பது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும்,


எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகங்களில் பாதுகாப்புத் தொடர்பில் இங்கு கருத்துத் தெரிவித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, இது தொடர்பில் முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்காலத்தில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் சோதனையிடுவதற்கும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND
IELTS
Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்
Life Skills A1/A2
திருமணமாகி UK செல்பவர்களுக்கானது
நேரில் வரும்போது எம்மாயிலாக வெளிநாடுகளுக்கு சென்றவர்களை பார்வையிட முடியும். (இலவச வழிகாட்டல்)
WEC COLLEGE
யாழ்ப்பாணம் - ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்)
சாவகச்சேரி - சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே)
0779265447/ 0217200989
(867)

பணியாளர் தேவை
சாவகச்சேரியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு றொட்டி வேலை, கொத்து றொட்டி போடுதல், சமையல் உதவியாளர், பிறைட்றைஸ் தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்) போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர்கள் தேவை.
(869)
தொடர்பு : 077 649 1027

# மரண அறிவித்தல்



பிறப்பு 1946 - 03 - 28

இறப்பு 2025 - 02 - 20

## தியாகராசா சுவாமிநாதன்

(முன்னாள் பணியாளர் - பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்)

தேவாலய வீதி, கூழாவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சுவாமிநாதன் அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - அன்னபூரணம் தம்பதியினரின் அருமை மகனும் தையிட்டி, காங்கேசன்துறையை சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் தையல் நாயகியின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கி.மகேஸ்வரன், ந.இரட்ணேஸ்வரி, க.குகனேஸ்வரி, ம.சர்வேஸ்வரி, க.கணேசலிங்கம், க. கைலைநாதன், க.பாலேந்திரன், க.தனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ந.கிருஸ்ணகுமார், காலஞ்சென்ற ந.இராஜயோகேஸ்வரர், வி.சுதாமதி ஆகியோரின் சிறிய தந்தையும் ம.இராதயன், ம.இராமகானகன் ஆகியோரின் பெரியப்பாவும் க.துவாரகன், பா.அகிபன், த.யாழோவியன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

தகவல் : குடும்பத்தினர்
021 225 6105

(C-2304)

முழுநேர அலுவலர் தேவை(பெண்)
லைடன் புடவை நிலையம்
யாழ். நகரில் இயங்கும் பிரபல புடவை விற்பனை நிலையத்திற்கு கணனி அறிவு, ஆங்கில அறிவு, கணக்குத்துறையில் அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
புடவை வியாபாரத்தில் முன்னறிவும் அனுபவமும் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
திகதி : 24.02.2025
நேரம் : காலை 11.00 மணி - மதியம் 1.00 வரை
இடம் : லைடன் புடவை நிலையம்
Leyden Textiles centre
No. 410, Hospital Road, Jaffna.
T.P No : 021 222 2381
(C-2301)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
தொடர்புகளுக்கு :
www.villagehotel.lk
077 544 8503
(3456)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2305)

காணி விற்பனைக்குண்டு
பழைய Hari Haran Printers அமைந்துள்ள 5½ பரப்புக் காணியும் கட்டிடமும் K.K.S Road இல் விற்பனைக்குண்டு.
(3457)
தொடர்பு
076 830 3931
(Whatsapp)

தேவை
யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள எமது நிறுவனத்திற்கு சிங்களம், தமிழ் பேசக் கூடிய 18 - 28 வயதிற்கு இடைப்பட்டவர்கள் தேவை.
25 பதவி வெற்றிடங்கள் உள்ளது.
மேலதிக தகவல்களுக்கு
076 627 2742, 076 075 5280
078 161 9606
(870)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org